## ‘திராவிட மாடல்’ அரசில் இளைஞர்களை அதிகாரமயப்படுத்த பல்வேறு திட்டங்கள்:

# பா.ஜ.க. என்ன செய்தாலும், முற்போக்குச் சிந்தனைகள் கொண்ட இன்றைய இளம் தலைமுறையினரின் நம்பிக்கையை வெல்ல முடியாது!

### சென்னையில் ‘தி வீக்’ ஆங்கில வார இதழ் கருத்தரங்கில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




**சென்னை,மார்ச் 4-**

**சென்னை, தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் 'தி வீக்' ஆங்கில வார இதழின் கருத்தரங்கம் நடைபெற்றது. துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட இயக்க அரசியல் மற்றும் தற்கால இளைஞர்களின் போக்கு ஆகியவை பற்றி விரிவாகப் பேசினார். இதில் ஊடகவியலாளர்கள், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் பல துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.**

**அப்போது அவர், ``பா.ஜ.க. என்ன செய்தாலும், நவீன மற்றும் முற்போக்குச் சிந்தனைகளில் நம்பிக்கைகொண்ட இன்றைய இளம் தலைமுறையினரின் நம்பிக்கையை அவர்களால் வெல்ல முடியாது" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:**

அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். தி வீக் ஆங்கில பத்திரிகை ஏற்பாடு செய்திருக்கும் இந்தக் கருத்தரங்கத்தில் பேசுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய இளம் தலைமுறையினரிடம் திராவிட இயக்க அரசியலின் பொருத்தப்பாடு குறித்து, என் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இளைஞர்கள் அரசியலில் ஆர்வம் காட்டவில்லை என்று, பொதுவாக ஒரு தவறான கருத்து நிலவுகிறது. நான் அதை நம்பவில்லை. இளைஞர்கள் இயல்பாகவே எல்லாவற்றையும் ஆர்வத்துடன் அறிய விரும்புபவர்கள். அவர்களுடைய பெரும்பாலான கற்றல், உரையாடல் மற்றும் பொழுதுபோக்கு ஆகியவை இணையதளம் வழியாகவே இப்போது நடக்கிறது.

### உண்மைத் தன்மை அறிய விருப்பம்

பலரும் கவனித்திருப்பது போல, ஒரு பொருளை வாங்குவதற்கு முன், அவர்கள் ரிவ்யூக்களைப் பார்க்கிறார்கள். ஒரு சேவையைப் பெறுவதற்கு முன், பிளாட்பார்ம்களை ஒப்பிடுகிறார்கள். அதேபோல, ஒரு அரசியல் கூற்றை நம்புவதற்கு முன், அவர்கள் அதன் உண்மைத் தன்மையை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள்.

பழமையையும் அதிகாரத்தையும் கேள்வி கேட்க, அவர்கள் தயாராக உள்ளனர். அவர்கள் சமத்துவம், பன்முகத்தன்மை, கண்ணியம் மற்றும் சுயமரியாதை ஆகியவற்றை மதிக்கிறார்கள் — இவையே திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகள்.

### திராவிட இயக்கம்

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக, திராவிட இயக்கம், பகுத்தறிவுச் சிந்தனை, சமூக நீதி, மாநில சுயாட்சி மற்றும் சமத்துவத்திற்காகப் போராடி வருகிறது. எனவே, இளைஞர்கள் இயல்பாகவே திராவிட இயக்கத்தின் கொள்கைகளுடன் பொருந்துகிறார்கள். நாம் மேற்கொள்ளவேண்டிய பணி அவர்களுக்கு திராவிட அரசியலை நன்கு புரிய வைப்பது தான்.

குறிப்பாக, சமூக மாற்றத்திற்காக திராவிட இயக்கத்தின் பங்களிப்புகளையும், தியாகங்களையும், எடுத்துச்சொல்வதன் மூலம் இதை செய்ய முடியும் என்று நம்புகிறேன். ஆனால், பிரச்சினை என்னவென்றால், திராவிட அரசியலுக்கு எதிரான பாசிச சக்திகள், இளைஞர்களைத் திசை திருப்ப முயல்கின்றன.

இந்தக் கருத்தரங்கில் நம்பிக்கையுடன் கூறுகிறேன், பா.ஜ.க. என்ன செய்தாலும், நவீன மற்றும் முற்போக்குச் சிந்தனைகளில் நம்பிக்கைகொண்ட இன்றைய இளம் தலைமுறையின் நம்பிக்கையை அவர்களால் வெல்ல முடியாது.

### பா.ஜ.க.வின் தேர்தல் உத்திகள்

பா.ஜ.க. சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பாதுகாப்பதில் நம்பிக்கை கொண்டுள்ளது. இதை இளம் தலைமுறை ஒருபோதும் ஏற்காது. ஆனால், திராவிட இயக்கக் கொள்கைகள் சமத்துவத்தை விரிவுபடுத்தவும், பெண்களை அதிகாரப்படுத்தவும், ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் விடுதலையையும் நோக்கமாக கொண்டுள்ளன. பா.ஜ.க. அதிகாரக் குவிப்பை நம்புகிறது, திராவிட அரசியல் கூட்டாட்சியை உயர்த்திப் பிடிக்கிறது. அவர்கள் ஒருமைத்தன்மையை திணிக்கிறார்கள். நாம் பன்முகத்தன்மைக்காக நிற்கிறோம். இந்த வேறுபாட்டை இளம் தலைமுறையினர் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். வெறுப்பைப் பரப்புவதும் சமூகத்தைப் பிளவுபடுத்துவதும், பா.ஜ.க.வின் தேர்தல் லாபத்திற்கான முதன்மை உத்திகள். பா.ஜ.க. அனைத்து மாநிலங்களிலும் இந்தியை திணிக்கவும், படிப்படியாக அதை நாட்டின் தேசிய மொழியாக ஆக்கவும் விரும்புகிறது. ஆனால், புதிய கல்விக் கொள்கை தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். உண்மையில், மும்மொழிக் கொள்கை மூலம் இந்தியை நமது பள்ளிகளில் திணிப்பதே அவர்களின் நோக்கம்.

தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்காமல், தமிழ்மொழியைப் பாதுகாக்க போராடியவர்களின் தியாகங்களைக் கருத்தில் கொள்ளாமல், தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை தொடர்ந்து திணிக்க முயல்கிறார்கள். ஒன்றிய பா.ஜ.க. அரசு கல்வி நிதியில் 3,548 கோடி ரூபாயை நிறுத்தி வைப்போம் என்று அச்சுறுத்தியபோது, நமது முதலமைச்சர் தெளிவான பதிலை அளித்தார். 10,000 கோடி ரூபாய் கொடுத்தாலும், தமிழ்நாடு ஒருபோதும் மூன்று மொழிக் கொள்கையை ஏற்காது. நமது இளைஞர்கள் இந்த எதிர்ப்பைத் தொடர்ந்து முன்னெடுப்பார்கள்.

### அழிவின் விளிம்பில் பல மொழிகள்

வட மாநிலங்களின் பல பிராந்திய மொழிகளை, இந்தி அழிவின் விளிம்புக்குத் தள்ளியுள்ளது என்பதை நாம் அறிவோம். தாய்மொழி உரிமையை உயர்த்திப் பிடிப்பதிலும் பாதுகாப்பதிலும் நாட்டுக்கே முன்மாதிரி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. மும்மொழிக் கொள்கையை, நாம் வலுவாக எதிர்த்த பிறகு, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களும் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தன. கன்னடம் மற்றும் மராத்தி போன்ற தங்கள் தாய்மொழிகளுக்கு முன்னுரிமை அளிப்பதை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர். ஆனாலும், பா.ஜ.க. மும்மொழிக் கொள்கையை தொடர்ந்து திணிக்க முயல்கிறது.

நேற்று மதுரை வந்த பிரதமர் ஆங்கிலத்தில் பேசினார். அதற்கு முன் நடந்த எல்லா கூட்டங்களிலும் இந்தியில் உரையாற்றினார் அதே பிரதமர் இங்கு ஆங்கிலத்தைத் தேர்ந்தெடுத்தார். அதுதான் தமிழ்நாடு. தமிழ்நாட்டிற்கு வந்தால், இந்தி ஆதரவாளர்களும் மும்மொழிக் கொள்கை ஆதரவாளர்களும் கூட ஆங்கிலத்தில் பேசும் நிலை தான் உள்ளது. ஒரு மொழி அழிந்தால், கூடவே அதன் கலாச்சாரமும் அழிகிறது. தமிழுக்கு அப்படி நடக்க தமிழ்நாடு ஒருபோதும் அனுமதிக்காது. தி.மு.கழகம் அந்த உணர்வை மட்டுமே, உயர்த்திப் பிடிக்கிறது, அதன் காரணமாக பா.ஜ.க.வை அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் முழு உறுதியுடன் எதிர்க்கிறது.

அதேபோல, திராவிட அரசியல் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பின்தங்கிய சமூகங்களுக்கு இடஒதுக்கீட்டை வலுவாக வலியுறுத்துகிறது. இடஒதுக்கீடு என்பது வெறும் தானமோ உதவியோ அல்ல. அது அரசியலமைப்பு நமக்கு வழங்கி இருக்கும் உரிமை. நூற்றாண்டுகளாக ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்கு ஏற்பட்ட ஆழமான காயங்களுக்கு இடஒதுக்கீடு மருந்தாக விளங்குகிறது. ஆனால் சாதி சலுகையை இன்னும் பிடித்துக் கொண்டிருக்கும் உயர் சாதியினர் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக பொய்களைப் பரப்புகின்றனர். திராவிட இயக்கம் மட்டுமே தங்கள் உரிமைகளையும், கண்ணியத்தையும், எதிர்காலத்தையும் பாதுகாக்கிறது என்பதை நமது இளைஞர்கள் அறிவார்கள். நமது திராவிட மாடல் அரசு இளைஞர்களை அதிகாரமயப்படுத்த பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. கல்லூரி மாணவர்களுக்கு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டங்களின் கீழ், மாதம் 1,000 ரூபாய் உதவி தொகையாக வழங்கப்படுகிறது. மாநிலம் முழுவதும் 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப்கள் வழங்கப்பட்டுள்ளன. மேம்பட்ட கற்றல் மற்றும் AI தொழில்நுட்ப பயன்பாட்டை ஆதரிக்க, நான் முதல்வன் திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதும் இளைஞர்களுக்கு சுமார் 50 லட்சம் திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

நான் முதல்வன் மூலம் சுமார் 5 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பு ஆணைகளைப் பெற்றுள்ளனர். முந்தைய ஆட்சியின்போது மாநிலத்தில் 2,000 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் 2021-இல் நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, சுமார் 12,000 ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இது முந்தைய அரசில் இருந்த நிலையை விட, ஆறு மடங்கு அதிகம். 2011-இல் திமுக ஆட்சியில் இருந்தபோது, தமிழ்நாட்டிலிருந்து 100-க்கும் மேற்பட்டோர் யு.பி.எஸ்.சி.யில் தேர்ச்சி பெற்றனர். ஆனால் 2011 முதல் 2021 வரை இதில் பெரும் சரிவு ஏற்பட்டது. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து வெறும் 27 பேர் மட்டுமே யு.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்றனர். எனவே, நான் முதல்வன் மூலம் போட்டித் தேர்வு பயிற்சியை தொடங்கினோம். ஒவ்வொரு ஆண்டும் வெளிப்படையான தேர்வு மூலம் 1,000 போட்டியாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நிதி உதவி வழங்குகிறோம். நான் முதல்வன் போட்டித் தேர்வு மையம் தொடங்கிய பிறகு, 2025-இல் சுமார் 60 மாணவர்கள் யு.பி.எஸ்.சி. தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

### இளைஞர்களுக்கு சம வாய்ப்பு

கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டிலும் நமது இளைஞர்களுக்கு சம வாய்ப்புகளை உறுதி செய்கிறோம். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் வெறும் 3 வேலைகள் மட்டுமே வழங்கப்பட்டன. ஆனால், 2021 முதல், விளையாட்டு வீரர்களுக்கு சுமார் 300 அரசு வேலைகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு சாம்பியன்ஸ் ஃபவுண்டேஷன் மூலம், போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்பே, விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்குகிறோம். அவர்களின் சாதனைகளுக்குப் பிறகு, உயர் பணப் பரிசுகளை வழங்குகிறோம். மாநிலம் முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கிறோம்.

முந்தைய அதிமுக அரசின் 10 ஆண்டு காலத்தில், விளையாட்டு உள்கட்டமைப்பிற்கு வெறும் 380 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் கடந்த ஐந்து ஆண்டுகளில் நமது திராவிட மாடல் அரசு 600 கோடி ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உள்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இளைஞர்களுக்கான இந்தத் திட்டங்கள் புகழுக்காக மட்டுமல்ல. முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்டவை. நமது மாண்புமிகு முதலமைச்சர் தெளிவாகக் கூறியுள்ளார், ``தமிழ்நாட்டின் செழிப்பு நோக்கிய பயணத்தில், யாரையும் பின்தங்க விட மாட்டோம்.” அந்த அடிப்படையில், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் அதிகாரப்படுத்தும் வகையில், நமது திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இன்று நாடு முழுவதும், மக்களுடன் தரையில் தினசரி நிற்கும் ஒரே தலைவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் தான்.

### செயல்படுத்திய திட்டங்கள்

நமது அரசு செயல்படுத்திய திட்டங்கள் காரணமாக, ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு உறுப்பினர் பயனாளியாகியுள்ளார். இளைஞர்கள் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு,

பா.ஜ.க.வின் பொய் பிரச்சாரத்தை முழுமையாக நிராகரிப்பார்கள் என்று நம்புகிறேன். பா.ஜ.க. ஊழலை ஒழிக்க விரும்புவதாக நடிக்கிறது. இந்த பாசிசவாதிகள் தங்கள் அரசியல் லாபத்திற்காக சி.பி.ஐ., இ.டி, ஐ.டி ஆகியவற்றைத் தவறாகப் பயன்படுத்துகின்றனர். சமீபத்தில், திமுக மோடிக்குப் பயப்படவில்லை என்று கூறினேன். நேற்று மதுரையில் பொதுக்கூட்டத்தில் பேசியபோது, மோடி என்னை மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர் தனக்குப் பயப்படவில்லை என்று கூறியதாகக் குறிப்பிட்டார். ஜனநாயகத்தில் யாரும் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை என்றார். அவர் இதை என்னிடம் சொல்ல வேண்டாம். எடப்பாடி பழனிசாமி மற்றும் தமிழ்நாட்டில் பிற கூட்டணி தலைவர்களிடம் சொல்லலாம். அந்தக் கூட்டத்தில், அதிமுக உறுப்பினர்கள் நுழைவாயிலில் பெரியாரின் படத்தை வைத்திருந்தனர். ஆனால் பா.ஜ.க. அதை எதிர்த்து, பெரியார் படத்தை அகற்றுமாறு கேட்டது.

எச்சரிக்கை வந்த உடனேயே, எடப்பாடி பழனிசாமி தன் ஆட்களிடம் சொல்லி பெரியார் படத்தை இறக்கச் சொன்னார். பிறகு அதற்கு பதிலாக என்ன வைத்தார்கள்? பா.ஜ.க.வின் தாமரை சின்னம். ஆச்சரியம் என்னவென்றால், அ.தி.மு.க. தன் கட்சி சின்னத்தைக் கூட வைக்கவில்லை. பா.ஜ.க. சின்னத்தை வைத்துள்ளனர். அரசியலில் முரட்டு ஆதரவாளர்களைப் பார்த்திருக்கலாம். ஆனால் முரட்டு அடிமையை எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா? தமிழ்நாட்டுக்கு வாருங்கள். எடப்பாடி பழனிசாமியில் ஒருவரைப் பார்ப்பீர்கள். இதுதான் பயம் செய்யும் வேலை. தமிழ்நாட்டில் பா.ஜ.க. உருவாக்கிய கூட்டணி கொள்கை கூட்டணி அல்ல.

எடப்பாடி பழனிசாமி மட்டுமல்ல, அந்த கூட்டணி தலைவர்களும் அனைவரும் இப்போது பயத்தில் உள்ளனர். எனவே, டெல்லியிலிருந்து வந்த அவர், தன் கூட்டணித் தலைவர்களிடம் கூற வேண்டும். - ``சம்பந்திக்கு எதிரான டெண்டர் வழக்கைப் பயன்படுத்தி அச்சுறுத்த மாட்டேன், மருத்துவக் கல்லூரி மோசடி வழக்கைப் பயன்படுத்தி அச்சுறுத்த மாட்டேன், ஃபெரா வழக்கைப் பயன்படுத்தி அச்சுறுத்த மாட்டேன் என்று, அவர்களுக்கு மோடி உறுதியளிக்க வேண்டும்” - பயப்பட வேண்டியதில்லை என்று. நான் மீண்டும் கூறுகிறேன், தி.மு.கழகம் எந்த அச்சுறுத்தலுக்கும் பயப்படாது.

விளைவுகள் எதுவாக இருந்தாலும் திராவிட இயக்கம், அநீதிக்கு எதிராக நிற்கக் கற்றுத் தந்துள்ளது ஆம், பெருமையுடன் கூறுகிறேன், நாங்கள் திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள். டெல்லியிலிருந்தோ குஜராத்திலிருந்தோ வருபவர்கள் யாராக இருந்தாலும், நாங்கள் யாருக்கும் பயப்பட மாட்டோம்.

நாங்கள் உறுதியாக நிற்போம். எதிர்ப்போம். ஒருபோதும் தலைகுனிய மாட்டோம். இந்த சட்டமன்றத் தேர்தலில் நமது கூட்டணி பெருவெற்றி பெறும். உரையை முடிக்கும் போது நான் கூற விரும்புவது, தி.மு.க.வின் பயணம் வரலாறு நெடுக, எப்போதும் இளைஞர்களுடன் தான் இருந்து வருகிறது. அந்த பாரம்பரியம் நமது இளைஞர்களின் ஆதரவுடன் என்றும் தொடரும். உங்கள் நேரத்திற்கும் கவனத்திற்கும் நன்றி. என்னை அழைத்ததற்கு தி வீக் ஆங்கில வார இதழுக்கு நன்றியைத்தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திராவிட இயக்கத்தின் வளர்ச்சி மற்றும் தற்கால இளைஞர்களின் அரசியல் பற்றி விரிவாகப் பேசினார்.

---

### ஊடகவியலாளர்கள் – பல துறைகளைச் சேர்ந்தவர்களின் கேள்விகளுக்கு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதிலளித்தார்!




### கேள்விகள்– பதில்கள்

**கேள்வி:** பவானி தேவி போன்ற பலரைத் தற்போது கண்டறிந்து, அவர்கள் முன்னேறுவதற்காகத் தமிழநாடு அரசும் நீங்களும் பல உதவிகளைச் செய்து வருகிறீர்கள். இது போன்ற வீரர்களை எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள்? அவர்களை எப்படி அடையாளம் காண்கிறீர்கள்? பவானி தேவி பற்றி உங்கள் கருத்து என்ன? இவர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன என்பதை, விளையாட்டுத் துறை எவ்வாறு முதலில் கண்டறிகிறது?

**துணை முதலமைச்சர்:** அதுதான் எங்களின் முதன்மையான பணி. அதற்காகத்தான் இந்த விளையாட்டுத் துறை உருவாக்கப்பட்டது. முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இதற்கெனத் தனியாக ஒரு துறையை உருவாக்கி, வளர்ந்து வரும் திறமைகளைக் கண்டறிந்து, அவர்களை வளர்த்தெடுத்து, அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்பதற்காகவே இத்துறையைத் தொடங்கினார்.

### ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய்

பவானி தேவி ஏறத்தாழ 19 ஆண்டுகளாகத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் ஆதரவில் இருக்கிறார். அவர் `சாம்பியன்ஸ் மேம்பாட்டுத் திட்டம்’ (CDS) என்பதில் இணைந்து, கடந்த 19 ஆண்டுகளாகத் தொடர்ந்து எஸ்.டி.ஏ.டி-யுடன் தொடர்பில் உள்ளார். தற்போது அவர் `எலைட்’ (Elite) திட்டத்தின் கீழ் இருக்கிறார். இந்தத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாயைத் தமிழ்நாடு அரசு அவருக்கு வழங்குகிறது. அவர் போட்டிகளில் வெற்றி பெற்றால், அதற்கான ஊக்கத்தொகை தனியாக வழங்கப்படும். தவிர, அவரின் மருத்துவச் செலவுகள், பயணம், உணவு ஆகியவற்றைத் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது.

ஒரு விளையாட்டு வீரருக்கு இவை மிகவும் முக்கியமானவை. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி 11 முறை பங்கேற்ற ஒரே வீராங்கனை அவர்தான். தற்போது தோள்பட்டைக் காயம் காரணமாக அவர் மீண்டெழும் சிகிச்சையில், பிரான்ஸ் நாட்டில் இருக்கிறார். தனது மருத்துவச் செலவுகளுக்காக முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தார். உடனடியாக, நாங்கள் அதை முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றோம். அவர் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் எவ்வளவு பதக்கங்களை வென்று கொடுத்திருக்கிறார் என்பதை விளக்கி, அவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகிறோம்.

இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் அவர் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அதில் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். ஒலிம்பிக் போட்டிகளுக்கும் அவர் தயாராகி வருகிறார். அவர் தமிழ்நாட்டுக்கும் இந்தியாவுக்கும் மேலும் பல பெருமைகளைத் தேடித் தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**கேள்வி:** பொதுவாகப் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கோ அல்லது கட்சித் தலைமைக்கு நெருக்கமானவர்களுக்கோ `கனமான’ துறைகளே (Portfolio) ஒதுக்கப்படும். ஆனால், நீங்கள் தேர்வு செய்தது விளையாட்டுத் துறை.

**துணை முதலமைச்சர்:** கனமான துறை என்றால் என்ன?

**கேள்வி:** அதாவது அதிக வருவாய் ஈட்டக்கூடிய அல்லது செல்வாக்குமிக்க துறைகளாக அவை இருக்கும். ஆனால் நீங்கள் விளையாட்டுத் துறையைத் தேர்வு செய்துள்ளீர்கள். ஏன் இத்துறையைத் தேர்ந்தெடுத்தீர்கள்? இதில் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளீர்கள்? இன்னும் என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வர விரும்புகிறீர்கள்?

**துணை முதலமைச்சர்:** ஒரு அரசு செயல்படும்போது, இது சிறிய துறை, இது பெரிய துறை அல்லது உங்கள் மொழியில் சொன்னால் இது ‘கனமான’ துறை, இது ‘மெலிதான’ துறை என்ற பாகுபாடு எதுவுமே கிடையாது. எந்தத் துறையின் மூலம் மக்களை அதிக அளவில் சென்றடைய முடியுமோ, எந்தத் துறையின் மூலம் அதிகமான நலத்திட்டங்களை வழங்க முடியுமோ, அதுவே கனமான துறை.

அப்படிப் பார்த்தால், நான் இத்துறையை ஏற்ற பிறகு இந்த விளையாட்டுத் துறைக்கு அதிக கவனம் கிடைத்துள்ளது. அது ஒரு காரணமாகவும் இருக்கலாம். நான் விளையாட்டுத் துறையை மட்டும் கவனிக்கவில்லை; உங்கள் தகவலுக்காகக் கூறுகிறேன், ‘சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை’ என்றொரு துறையும் என்னிடம் உள்ளது. அரசின் எந்தவொரு துறையின் ஆய்வுக் கூட்டத்தையும் இத்துறை நடத்த முடியும்.

நான் இத்துறையின் அமைச்சராக இருப்பதால், கடந்த மூன்றரை ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்துக்கும் குறைந்தது மூன்று முறை பயணம் செய்துள்ளேன். அங்கிருக்கும் அரசு அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவோம். அது மூன்று முதல் நான்கு மணி நேரம் வரை நடைபெறும். ஒவ்வொரு துறையிலும் அரசு அறிவித்த பணிகள் எந்த அளவில் உள்ளன, அந்த மாவட்டத்திற்கு வேறென்ன தேவை, எத்தனை மனுக்கள் வந்துள்ளன என்பன குறித்து ஆய்வு செய்வோம்.

மற்றொன்று, மகளிர் சுய உதவிக் குழுக்கள். தற்போதைய முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது இத்துறையையும் கவனித்தார். அது விளையாட்டுத் துறையை விட கனமான துறை. ஏனெனில், தமிழ்நாட்டில் 4.5 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. இதில் சுமார் 60 இலட்சம் மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களுக்காகவும் நாங்கள் பல புதிய முயற்சிகளையும் திட்டங்களையும் மேற்கொண்டுள்ளோம்.

இளைஞர்களுடன் எளிதாகத் தொடர்பு கொள்ளக்கூடிய துறை என்பதால், விளையாட்டுத் துறையைத் தேர்ந்தெடுத்தோம். முக்கியமாக, விளையாட்டு உள்கட்டமைப்பைப் பொறுத்தவரை, கடந்த அ.தி.மு.க அரசுடன் ஒப்பிடுவது தவறாகத் தெரியலாம். ஆனால், அப்படிச் சொன்னால்தான் இத்துறையில் எவ்வளவு பணிகள் நடந்துள்ளன என்பது புரியும். கடந்த 10 ஆண்டுகளில் அவர்கள் ஒதுக்கியது 380 கோடி ரூபாய். ஆனால், கடந்த நான்கு ஆண்டுகள் 10 மாதங்களில் இந்த அரசு ஒதுக்கியது சுமார் 600 கோடி ரூபாய். அதேபோல், ஒவ்வொரு பட்ஜெட்டிலும் நிதி ஒதுக்கீட்டைத் தொடர்ந்து அதிகரித்து வருகிறோம்.

முதலமைச்சரின் மகன் என்பதால் கூடுதல் முக்கியத்துவம் கிடைத்துவிடும் என்பது தவறு, அது அவ்வளவு சுலபமாக நடந்துவிடாது. நாங்கள் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகச் செயல்பட்டு, அதிகப் பதக்கங்களை வென்று, சாதனையாளர்களின் விவரங்களை முதலமைச்சரிடம் சமர்ப்பித்து மெய்ப்பித்த பிறகே, இவ்வளவு போட்டிகளையும் உள்கட்டமைப்பு வசதிகளையும் செய்து வருகிறோம்.

உதாரணமாக, ஐந்து மாதங்களுக்கு முன்பு உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிகள் நடைபெற்றன. இது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும். நீண்ட இடைவேளைக்குப் பிறகு தமிழ்நாட்டுக்கு அந்த வாய்ப்பு கிடைத்தது. அதற்கு இரண்டு இடங்கள் தேவைப்பட்டன. ஒன்று சென்னையில் நடத்துவதென முடிவானது. மற்றொன்றைக் கோயம்புத்தூரில் நடத்தலாம் என அவர்கள் கருதினார்கள். ஆனால், தென் தமிழ்நாட்டில் நிறைய ஹாக்கி வீரர்கள் இருப்பதால், அவர்களுக்கும் ஒரு அனுபவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக, மதுரையில் நடத்தலாம் என நான் கூறினேன்.

மதுரையில் அதற்கான வசதியோ, ஹாக்கி மைதானமோ அப்பொழுது இல்லை. உடனடியாக முதலமைச்சரிடம் பேசி நிதி பெற்று, நான்கே மாதங்களில் சர்வதேசத் தரம் வாய்ந்த ஒரு ஹாக்கி மைதானத்தை மதுரையில் கட்டி முடித்து, போட்டியையும் நடத்தினோம். அங்கு வந்து விளையாடிய 20 நாடுகளைச் சேர்ந்த சர்வதேச வீரர்கள், சென்னை மைதானத்தை விட, மதுரை மைதானம் சிறப்பாக இருப்பதாகக் கூறினார்கள்.

### எல்லோருக்கும் எல்லாம்

இதுபோன்ற ஒரு பரவலான முன்னேற்றமே எங்களின் இலக்கு. `எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் திராவிட மாடல் அரசின் கொள்கை. அப்படி அனைவருக்குமான வளர்ச்சியை இந்த அரசு வழங்கி வருகிறது. அதன் விளைவாக, விளையாட்டுத் துறையில் சிறப்பாகச் செயல்படும் மாநிலத்திற்கான (Best State Performing in Sports) விருதை, எங்களது துறை தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகப் பெற்றுள்ளது. நாங்களும் எங்களை மெய்ப்பித்துள்ளோம்.

சில விளையாட்டு வீரர்கள் முதலமைச்சரைச் சந்திக்கும்போது, மீண்டும் உங்களது அரசு அமைந்தால் (Dravidian Model 2.0) இவரையே மீண்டும் விளையாட்டுத் துறை அமைச்சராக நியமிக்க வேண்டும் எனக் கோரிக்கை வைக்கின்றனர். இது எனக்கு எவ்வளவு பெரிய அழுத்தம் என்பது எனக்குத்தான் தெரியும். ஏனெனில், இதைவிடச் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் அதற்கான திறமைகள் நிறைய உள்ளன. அவர்களை வளர்த்தெடுத்து வழிகாட்டுவதுதான் எங்களது துறையின் வேலை என்று நான் கருதுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதில் கூறினார்.